**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY UNIT OF M/s RDS INFRASTRUCTURE ROUGH STONE QUARRY AT S.F. NO. 419 (PART-4), VINNAMANGALAM VILLAGE, AMBUR TALUK, TIRUPATHUR DISTRICT ON 11.07.2025 AT 3.00 PM IN M/s ASHOK MAHAL, M.C ROAD, CHENNAI – BANGALORE NATIONAL HIGHWAY, ALANKUPPAM VILLAGE, AMBUR TALUK, TIRUPAHUR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | **Tmt. J. Ajitha begum** | : Revenue Divisional Officer, Vaniyambadi, Tirupathur District. |
| 2. | **Thiru.Er. C. Tholkappiyan** | : District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board Vaniyambadi, Tirupathur District |

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi.**

At the outset, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi has welcomed the Revenue Divisional Officer, other Government officials, NGOs, Environmentalists and all the Public present in the public hearing meeting. He briefed the project proposal of Rough Stone Quarry proposed at Vinnamangalam Village, Ambur Taluk, Tirupathur District explaining that the above projects falls under the 'B1' Category under Schedule 1A of Environment Impact Assessment (EIA) vide Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change as they forms a cluster of more than 5 Hectares area and therefore it is necessary to conduct public hearing meeting to obtain Environmental Clearance for the quarry project from the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

Then DEE, TNPCB requested the Sub-Divisional Magistrate/Revenue Divisional officer, Vaniyambadi to preside and conduct the public hearing meeting. RDO welcomed all and has informed that she was deputed by the District Collector, Tirupathur District to preside over the meeting on behalf of the District administration

and explained the procedure to be adopted during the meeting and commenced the meeting.

Subsequently, District Environmental Engineer, Vaniyambadi, Tirupathur District has requested the project consultant to present the proposed project details and requested the public & NGOs and others gathered in the meeting Hall to give their opinion, concerns, clarification after the presentation.

**Technical Presentation, M.Vijayaragavan, Environmental Consultant, Geo Technical Mining Solution, Dharmapuri**

The Project Consultant, Geo Technical Mining Solution, Dharmapuri on behalf of Project proponent has presented the details of the project of M/s RDS Infrastructure Rough Stone Quarry through power point presentation.

He explained that stone quarry of M/s RDS Infrastructure Rough Stone Quarry proposed at S.F. NO. 419 (PART-4) at an extent of 1.00.0 Hectare of Vinnamangalam Village, Ambur Taluk, Tirupathur District is being conducted based on EIA Notification dated: 14.09.2006 published by Ministry of Environment and Forest Climate Change New Delhi.

He also informed that Press release for the public hearing meeting to this quarry was already published in Daily English and Tamil Newspapers ("Deccan Chronicle" and "The Daily Thanthi" respectively) was published on 07.06.2025 after getting the approval of the District Collector, Tirupathur for conducting public hearing meeting on 11.07.2025 at 03.00 pm. He also detailed the impact on Environment due to the project and Environment manage plan, requirement of man power, etc.,

**District Environmental Engineer, TNPCB, Vaniyambadi, Tirupathur District.**

After completion of the presentation, District Environmental Engineer has requested the public to introduce themselves with their name and village before speaking to express their suggestions, concerns and clarifications about this project and also assured that their views will be recorded both Audio & video and will be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai for further consideration for the issue of Environmental clearance.

## Thiru. Satheesh, Vinnamangalam

He says that,

- " I am the first person to be affected by the existing and proposed quarries. Hence I strongly oppose the six new quarries.
- The first quarry came up on my Agricultural land and I have cultivated finger millet, groundnut, samai, and pearl millet at an area of 5 acres nearer to the quarry. Dust generated from the jelly factory was deposited on the land reducing the yield of crops. After 5–6 years, soil will become infertile.
- The upcoming six quarries will cause major damages and due to the operation of the quarries, children within a distance of 4–5 km radius will suffer from diseases like asthma and lung cancer. Even if medical camps are conducted, it's the quarrying activities that cause the harm.
- In future, living will become a question mark in this village and therefore authorities should not grant permission for the proposed quarries".

## Thiru. Bhaskar Jayaraman, Periyangkuppam

He says that,

- " There are already 06 jelly factories surrounding this village. Already 2–3 deaths were caused due to the vehicle movements. Lorries drive at higher speed during school hours, risking accidents and will keep on happening if more jelly factories are allowed.
- Land and soil are already polluted due to the existing quarry activities. The existing factories are enough. Proposed quarries will harm future generations. Hence I strongly oppose the new quarries".

## Thiru. Meganathan, Vinnamangalam

He says that,

- "During present period, whether people are living in thatched houses or concrete houses and stated that Jelly is essential for everyone to live a comfortably in concrete houses. Jelly is also required for laying of road construction. In this regard, Jelly factories are very important for the

development actives. Those who are opposing the quarries are living in concrete houses only.

- The voices of locals should be heard, not the outsiders. Hence I support this proposed quarry project".

**Thiru. R.K. Tamil, Kennadikuppam**

He says that,

- "Is there any evidence that quarry lorries are causing accidents. Quarry trucks are not allowed to operate from 8–9 am and 4–5 pm during school hours and water was being sprayed on the roads at regular intervals to prevent the dust emission due to vehicle movement.
- The village president has issued approval for the proposed quarries and village president knows what is needed to local village people.
- All the quarries are operated as per the Government procedures and the Panchayat President and Ambur MLA will ensure people welfare.

**Thiru. Viji, Vinnamangalam**

He says that,

- "The upcoming quarries will not affect Vinnamangalam residents and the panchayat president's decision will be noted by the government.
- Since the quarry will be in Vinnamangalam, only the local leader can assess the real impact".

**Thiru. Kumar, Kattukollai, Vinnamangalam**

He says that,

- Vinnamangalam Panchayat needs the quarry and I support the proposed quarry project.

**Thiru. Paari, Jolarpet**

He says that,

- " Myself runs a hollow block company in Tirupathur District and about 50 families are employed in my factory. Quarry material was being sourced locally in affordable price. If quarry material sourced from other places like Hosur or Vellore, transport costs will make my business unviable.

- Local quarries allow us to thrive and he can help to live many families due to operation of quarries nearer to village. So, I support the upcoming project".

## Thiru. Patel, Vinnamangalam

He says as below,

- "If 06 new quarries are allowed in new areas other than Vinnamangalam village they there may be pollution and may have an Environmental impact. But all the proposed quarries are to be established nearer to the existing quarries which may be having already impact. Hence there will be no issues due to the activities of the proposed quarries. The already existing 5 quarries have not caused any problems. Let the new quarries come and there will be no new issues for the people".

## Thiru. Satheesh Kumar, Mittalam.

He says as below,

- "All the supporters are around the quarry area of Vinnamangalam and Kattukollai Panchayats. But according to site plans, employment is promised to locals but yet workers from other states were engaged. Other state workers are paid less and they are working for longer hours. Native people were not get jobs from jelly, M-sand, or P-sand units and also wildlife animals were affected due to quarry blasting.
- Government doesn't allocate necessary land for cattle grazing, but offer land for quarrying activities.
- So I oppose the proposed quarry project".

## Thiru. Murali, Kattukollai

He informed that,

- Quarry workers are local residents only and no one said only outsiders should work. Both educated and uneducated locals work in the quarry and quarry owners treat them like family members and help their families.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi, Tirupathur District.**

District Environmental Engineer thanked the Revenue Divisional Officer and all the public and NGOs who have participated in the public hearing meeting and the meeting came to an end.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing ((Total pages 10 & 71 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1& Pen drive) of the public hearing proceedings.

24/07/2025

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Vaniyambadi, Tirupathur District.

24/07/25

Revenue Divisional Officer,
Vaniyambadi,
Tirupathur District.

**திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு புறம்போக்கு நிலத்தில் ச.எண்.419 (பிரிவு-04), 1.00.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். RDS இன்பிராஸ்ட்ரக்சர் கல் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 11.07.2025 பிற்பகல் 03.00 மணியளவில் தி/ள். அசோக் மஹால், M.C. ரோடு, சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, ஆலங்குப்பம் கிராமம், ஆம்பூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. J. அஜிதா பேகம் | வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |
| 2. | Er. சி. தொல்காப்பியன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் / (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை வரவேற்று,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு புறம்போக்கு நிலத்தில் ச.எண்.419 (பிரிவு-04), அரசு புறம்போக்கு நிலம் 1.00.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். RDS இன்பிராஸ்ட்ரக்சர் கல் குவாரி இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல்

தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் தி/ள். RDS இன்பிராஸ்ட்ரக்சர் கல் குவாரி நிறுவனத்திற்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். அசோக் மஹாலில் 11.07.2025 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெறுமென டெக்கான் குரோனிகல் மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 07.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் / (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

**தொழில்நுட்ப விளக்க வல்லுநர்**, எம்.விஜயராகவன், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தர்மபுரி தி/ள். RDS இன்பிராஸ்ட்ரக்சர் கல் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

**திரு. சதீஷ், விண்ணமங்கலம்**

- பாதிக்கப்பட்ட முதல் நபர் நான் தான்.
- புதியதாக வரும் 6 குவாரிகளை 100 % எதிர்க்கிறேன்.
- முதலில் வந்த கல் குவாரி எங்களோட நிலத்தில் தான் வந்தது.
- 5 ஏக்கர் நிலத்தில், கேழ்வரகு, நிலகடலை, சாமை, கம்பு ஆகியவை வந்தது.
- ஜல்லி பேக்டரியினால் தூசி விவசாய நிலத்தில் படிந்து மகசூல் குறைந்து விட்டது.
- 5–6 வருடம் கழித்து மண் மலடாக மாறி விட்டது.
- 06 குவாரி வந்தால் மிக பெரிய பாதிப்பு ஏற்படும்.
- 06 குவாரி வருவதால் 4–5 கிமீ சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு மிக பெரிய பாதிப்பு ஏற்படும்,
- Lung cancer, Asthma போன்ற நோய்கள் வரும். மருத்துவ முகாம் குவாரி உரிமையாளர்கள் மூலம் நடத்தப்பட்டாலும், குவாரிகளால் தான் பாதிப்பு ஏற்படுகிறது.
- இந்த கிராமத்தில் வாழ்வதே கேள்விகுறி ஆகிவிடும்.
- இதற்கு அதிகாரிகள் அனுமதி அளிக்க கூடாது.

**திரு. பாஸ்கர் ஜெயராமன், பெரியாங்குப்பம்**

- ஊரைச்சுற்றி ஏற்கனவே 6 ஜல்லி பேக்டரி இருக்கிறது
- ஏற்கனவே இருக்கும் ஜல்லி பேக்டரியால் 2–3 மரணங்கள் நிகழ்ந்துள்ளது.
- மாலை நேரங்களில் பள்ளி குழந்தைகள் வரும் நேரங்களில் லாரிகள் அதி வேகத்துடன் செல்வதால் விபத்து நடக்க வாய்ப்புள்ளது.
- இனிவரும் ஜல்லி பேக்டரியால் அதிகரிக்கும் போது விபத்துக்கள் நடக்க வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.
- நில மாசு, மண் மாசினால் ஏற்கனவே பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது.

- இருக்கும் ஜல்லி பேக்டரிகள் போதும். புதிய ஜல்லி பேக்டரிகள் பின்வரும் சந்ததிகளுக்கு எந்தவித பாதிப்பு ஏற்படாமல் இருக்க என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மேகநாதன், விண்ணமங்கலம்**

- அனைவரும் பனை ஓலை/தையல் ஓலை வீடுகளில் வசிக்கிறார்கள்.
- ஜல்லி அனைவருக்கும் தேவைப்படுகிறது.
- சாலை அமைக்க ஜல்லிகள் தேவைப்படுகிறது.
- அரசாங்கத்தின் சாலை போட ஜல்லி தேவைப்படுகிறது.
- ஜல்லி பேக்டரி ரொம்ப முக்கியமானது.
- பேசும் அனைவருமே காங்கிரிட் வீடுகளில் வசிக்கின்றனர்.
- வெளியூரில் இருந்து பேசுபவர்களை கேட்காமல் இந்த ஊரில் பேசுபவர்கள் சொல்வதை கேட்க வேண்டும்.
- இந்த குவாரி எங்களுக்கு தேவை.

**திரு. R.K தமிழ், கென்னடிகுப்பம்**

- கல் குவாரி லாரிகளால் விபத்து ஏற்படுகிறது என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா?
- காலை (8-9 மணிக்குள்) மற்றும் மாலை (4-5 மணிக்குள்) குவாரி வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுகிறது.
- இடைப்பட்ட நேரத்தில் தண்ணீர் தெளிக்கப்படுகிறது.
- சாலைகளில் விபத்து ஏற்படுவதால் வாகனத்தை சாலையில் எடுத்து செல்லாமலா இருக்கிறீர்கள். விபத்து நடப்பது இயல்பு.
- பஞ்சாயத்து தலைவர் இதற்கு ஒப்புதல் அளிக்கிறார். கிராம பஞ்சாயத்து தலைவருக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு எதற்கு,
- நாங்கள் தேர்ந்தெடுத்த தலைவருக்கு எங்களுக்கு என்ன வேண்டுமென்று அவருக்கு தெரியும்.
- அரசாங்கத்தின் வழிமுறை பின்பற்றி தான் குவாரிகள் செயல்படுகின்றன,

- எங்கள் ஊருக்கான மரியாதையை பஞ்சாயத்து தலைவர், மணியகாரர், ஆம்பூர் MLA அவர்கள் தருகிறார்கள்.

**<u>திரு. விஜி, விண்ணமங்கலம்</u>**

- வரப்போகும் கல் குவாரிகளால் விண்ணமங்கலம் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.
- விண்ணமங்கலம் தலைவர் எடுக்கும் முடிவுகளை அரசு பார்த்துக்கொள்ளும்.
- விண்ணமங்கலத்தில் தான் குவாரிகள் வரப்போகிறது, அதனால் விண்ணமங்கலம் தலைவர் குவாரியினால் வரும் பாதிப்புகள் பற்றி பாதிப்பு இருக்கா இல்லையா என கூறுவார்.

**<u>திரு. குமார், காட்டுக்கொல்லை, விண்ணமங்கலம்</u>**

- விண்ணமங்கலம் பஞ்சாயத்திற்கு குவாரி தேவை

**<u>திரு. பாரி, ஜோலார்பேட்டை</u>**

- குவாரி வேண்டுமென்பதற்கான காரணம்
- Hollow Block Company நடத்தி வருகிறேன்.
- என்னால் 50 குடும்பங்கள் எனது கம்பெனியில் வேலை செய்கின்றனர்.
- குவாரி அருகாமையில் இருப்பதால் material விலை குறைவாக இருக்கிறது.
- ஓசூர் மற்றும் வேலூரிலிருந்து வாங்கினால் அப்போது போக்குவரத்து செலவு அதிகம் என்பதனால் தொழில் செய்ய முடியாத நிலை இருந்தது.
- இப்போது குவாரி அருகில் இருப்பதால் தொழில் சுமுகமாக இருக்கிறது. என்னால் 50 குடும்பங்களை வாழ வைக்க முடியும். இதற்கு அருகில் குவாரிகள் செயல்பட்டால் தான் இது சாத்தியமாகும்.

**திரு. பட்டேல், விண்ணமங்கலம்**

- 6 குவாரிகள் வேறு இடத்தில் வந்தால் தான் பாதிப்பு. ஏற்கனவே இருக்கும் 5 குவாரிகள் இருக்கும் இடத்தில் இருப்பதால் பாதிப்பு இல்லை.
- 6 குவாரிகள் வரட்டும். ஏற்கனவே இருக்கும் நிலை தான் இவை வந்த பின்பும் இருக்கும். இதில் எந்த பிரச்சினையும் வர வாய்ப்பில்லை.

**திரு. சத்தீஷ்குமார், மிட்டாளம்**

- குவாரி வேண்டும் என்பவர்கள் விண்ணமங்கலம் ஊராட்சி மற்றும் காட்டுகொல்லை ஊராட்சியை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.
- வரைபடத்தில் திட்ட விளக்கத்தை பார்க்கும்போது விண்ணமங்கல ஊர்மக்களுக்கு வேலை தருவதாக கூறுகிறார்கள். ஆனால் குவாரிகளில் வெளி மாநிலத்தவருக்கு வேலை தருகிறார்கள். ஏன் என்றால் இந்திகாரர்கள் குறைந்த சம்பளத்தில் அவர்கள் 24 மணி நேரம் வேலை செய்கிறார்கள்.
- எங்கள் கிராமத்தில், ஜல்லி, M-Sand, P-Sand என அனைத்தும் எடுத்துக்கொண்டு எங்கள் மக்களுக்கு வேலை கொடுப்பதில்லை,
- காட்டில் வெடி வைத்தால் விலங்குகள் பாதிக்கப்படும்.
- அரசாங்கம் ஆடு மாடுகளுக்கு நிலம் கொடுக்கவில்ல்லை. ஆனால் குவாரிகளுக்கு இடம் கொடுத்துள்ளார்கள்.
- எனவே குவாரி வேண்டாம்.

**திரு. முரளி, காட்டுக்கொல்லை**

- குவாரிகளில் ஊர் மக்களுக்கு தான் வேலை தருகிறார்கள்.
- வெளி மாநிலத்தவர் மட்டும் தான் வேலை செய்ய வேண்டுமென யாரும் கூறவில்லை.
- விண்ணமங்கலம் ஊராட்சி சுற்றி உள்ள படித்தவர்கள், படிக்காதவர்கள் என அனைவரும் குவாரிகளில் வேலை செய்கிறார்கள்.
- குடும்பம் போல தான் குவாரி உரிமையாளர்கள் இருக்கிறார்கள்.

➢ எங்கள் குடும்பத்திற்கான உதவிகளை அவர்கள் செய்து கொடுக்கிறார்கள்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி</u>**

தி/ள். RDS இன்பிராஸ்டிரக்சர் கல் குவாரி நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்துக்கொண்டார்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த வருவாய் கோட்டாட்சியர் /(Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் பொது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**<u>இணைப்பு:</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 10 மற்றும் நபர்கள் 71)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

24/07/2025

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

24/07/25

வருவாய் கோட்டாட்சியர்,
வாணியம்பாடி
திருப்பத்தூர் மாவட்டம்